DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No. 343/2025

Deposition of Witness : LW1/ PW1

| | | | |
|---|---|---|---|
| Name | சங்கர் | Taluk | |
| Father's Name | மாயவன் | Village | |
| Age | 51 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **17.11.2025.** | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**அரசு தரப்பு மறு விசாரணையின் தொடர்ச்சி :**

1. இந்த வழக்கு சம்பவம் நடந்தது தொடர்பான வீடியோ புட்டேஜ் மற்றும் கடலூர் அரசு மருத்துவமனையில் நான் மேல்சிகிச்சை பெற்றது சம்மந்தமான மருத்துவ சிகிச்சை ஆவணங்கள் தற்போது என்னிடம் உள்ளது என்றும், அதனை நான் சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என்று ஏற்கனவே அரசு தரப்பு மறுவிசாரணையின்போது, நான் சொல்லியிருந்த நிலையில் மேற்படி வீடியோ புட்டேஜ் அழிந்துவிட்டதால், தற்போது என்னிடம் இல்லை. அதனால் என்னால் அதனை சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை. மேற்படி வீடியோ புட்டேஜை சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க, வாய்ப்பு எதுவும் இல்லை. மேற்படி சம்பவத்தை யார் வீடியோ எடுத்தார்கள் என்றால், பண்ருட்டி போலிசார் எடுத்தார்கள். பண்ருட்டி போலிசார் சண்டை நடக்கும்போது, அதனை வீடியோ எடுத்தார்களா என்றால், சண்டை நடக்கும்போது பண்ருட்டி போலிசார் அதனை வீடியோ எடுக்கவில்லை, பின்னர் என்னை விசாரணை செய்தபோது, அங்கிருந்த மண்டபத்தை வீடியோ எடுத்தார்கள்.

2. நான் இவ்வழக்கு சம்மந்தமாக கடலூர் அரசு மருத்துவமனையில் நான் மேல்சிகிச்சை பெற்றது சம்மந்தமான மருத்துவ சிகிச்சை ஆவணங்களை தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ளேன். அதனை நான் சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேற்படி என்ன ஆவணம் என்றால் நான் மேற்படி மருத்துவமனையில் 03.06.2024 அன்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, 04.06.2024 அன்று மேற்படி மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கான டிஸ்சார்ஜ் சம்மரி அசல் ஆகும். **மேற்படி டிஸ்சார்ஜ் சம்மரி அசல் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி மருத்துவமனையால் என்னிடம் டிஸ்சார்ஜ் சம்மரி அசல் மட்டுமே வழங்கப்பட்டது. நான் மேற்படி மருத்துவமனையில் மேல்சிகிச்சை பெற்றதற்கான மற்ற ஆவணங்கள், மேற்படி மருத்துவமனையால் என்னிடம் வழங்கப்படவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

நான் பண்ருட்டி அரசு மருத்துவமனையில், Out patient ஆக முதலில் அனுமதிக்கப்பட்டு அங்கு சரியான சிகிச்சை கிடைக்கவில்லை என்று நானாகவே, கடலூர் அரசு பொது மருத்துவமனைக்கு அங்கிருந்து கிளம்பி சென்றுவிட்டேன். எனக்கு உண்மையிலேயே இவ்வழக்கு சம்பவத்தில் அடிப்பட்டிருந்தால், பண்ருட்டி அரசு மருத்துவமனையில், In patient ஆக அனுமதிக்கப்பட்டு அங்கு ஒருவேளை சரியான சிகிச்சை கிடைக்காமல் இருந்திருந்தால் மேற்படி மருத்துவர்கள் மூலம், கடலூர் அரசு பொது மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, சென்றிருப்பேன் என்றால் சரியல்ல. இன்று நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ-2 இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக கொடுக்கப்பட்ட சான்றாவணம் அல்ல என்றால் சரியல்ல. உண்மையிலேயே, இவ்வழக்கு சம்பவத்தால் பாதிக்கப்பட்டு, நான் கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றிருந்தால், முறையாக அங்கிருந்து டிஸ்சார்ஜ் சம்மரி பெற்று அதனை அந்த சமயத்திலேயே போலிசாரிடம் கொடுத்திருப்பேன் என்றாலும், இவ்வழக்கிற்காக பொய்யாக மேற்படி ஆவணமானது என்னால் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

# STC.No. 343/2025

## Deposition of Witness : LW3/ PW2

| Name | செல்வம் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | தண்டபாணி | Village | |
| Age | 47 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **17.11.2025.** | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது பண்ருட்டி எல்.என்.புரத்தில் வசித்து, கார் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சிகள் சங்கர், சரண்ரஜ் ஆகியோர்களையும், ஆஜர் எதிரியையும் தெரியும். கடலூர் சாலையில் அமைந்துள்ள அன்னை தெரசா கார் ஸ்டேண்டில் நானும், மேற்சொன்ன சாட்சிகள் சங்கர், சரண்ராஜ் ஆகியோர்களும், ஆஜர் எதிரி ஸ்ரீதரும் கார் ஓட்டுனராக உள்ளோம்.

**2.** கடந்த 03.06.2024 அன்று காலை 06.00 மணயளவில் (சாட்சி மீண்டும் காலை 07.00 மணி என்று கூறினார்.) நான் எனது பிள்ளைகளை பள்ளிக்கு அழைத்து சென்றபோது எனக்கு மேற்படி கார் ஸ்டேண்டில் உள்ள ஒரு நபர் (அவர் விபரங்கள் எனக்கு தற்போது ஞாபகமில்லை) எனக்கு போன் செய்து, மேற்சொன்ன கார் ஸ்டாண்டில் மேற்சொன்ன சங்கரும், ஸ்ரீதரும் சண்டைபோட்டு பிரச்சனை ஆகிவிட்டது என்றும், உடனடியாக காவல் நிலையத்திற்கு வருமாறும் கூறினார். மேற்படி இந்த வழக்கு சம்பவம் நடக்கும்போது, நான் சம்பவ இடத்தில் இல்லை. எனக்கு நேரடியாக மேற்படி சண்டை பற்றி எதுவும் தெரியாது. இதைத்தவிர எனக்கு இந்த வழக்கும் சம்மந்தமாக வேறு எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தபோது, நான் அவர்களிடம் என்ன சொன்னேன் என்று எனக்கு தற்போது நியாபகம் இல்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

1. ஆஜர் எதிரி எனக்கு சுமார் 20 வருடம் பழக்கமானவர் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் போலிசார் விசாரணையின்போது அன்னை தெரசா கார் ஸ்டாண்டின் தலைவராக சங்கர் உள்ள நிலையில், சங்கருக்கும், எதிரி ஸ்ரீதருக்கும் ஏற்கனவே பிரச்சனை ஏற்பட்டு, முன்விரோதம் இருந்து வந்தநிலையில், கடந்த 03.06.2024 அன்று காலை 6.20 மணியளவில் நானும், என்னுடன் எங்களது கார் ஸ்டாண்டின் கார் ஓட்டுனராக வேலை செய்யும் செல்வமும் மேற்படி கார் ஸ்டாண்டில் இருந்தபோது, தலைவர் சங்கர் அவரது காரை நிறுத்தி துடைத்துக்கொண்டிருந்தபோது, அங்கு வந்த ஸ்ரீதர் திடீரென்று சங்கரை பார்த்து அசிங்கமாக திட்டினார் என்றும், அதற்கு சங்கர், ஸ்ரீதரிடம் ஏன் என்னை அசிங்கமாக பேசுகிறாய் என்று கேட்டபோது, ஸ்ரீதர், சங்கரிடம் நீ என்னையே எதிர்த்து பேசுறியா என்று கேட்டு, அங்கு கீழே கிடந்த மூங்கில் கழியை எடுத்து, சங்கரின் முதுகில் அடித்தார் என்றும், பிறகு கையால் சங்கரின் மூக்கில் குத்தினார் என்றும், அதைப் பார்த்த நானும், என்னுடன் இருந்த செல்வமும் சண்டையை விலக்கிவிட்டோம் என்றும், பிறகு ஸ்ரீதர் அங்கிருந்து போகும்போது அவர் கையில் வைத்திருந்த மூங்கில் கழியை காட்டி சங்கரை பார்த்து இனிமேல், என்னிடம் வச்சுக்கிட்டா உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டிவிட்டு சென்றார் என்றும், பிறகு, சங்கருக்கு மூக்கில் இரத்தம் வந்ததால், அவர் சிகிச்சைக்கு பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றார் என்றும், இது சம்மந்தமாக பண்ருட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து, 04.06.2024 அன்று என்னை விசாரிக்க நான் நடந்ததை சொன்னேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு ஆஜர் எதிரி எனக்கு சுமார் 20 வருடம் பழக்கமானவர் என்பதால், அவரை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No. 343/2025

Deposition of Witness : LW4/ PW3

| Name | பிரகாஷ் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | அஞ்சாபுலி | Village | |
| Age | 44 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **17.11.2025.** | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

நான் தற்போது பண்ருட்டி மேல்குமாரமங்களத்தில் வசித்து, பண்ருட்டி, கார் ஸ்டாண்டில் கார் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். பட்டியல் சாட்சி முரளி என்பவரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் என் கையொப்பம் முதலாவதாக உள்ளது. இரண்டாவதாக உள்ள சாட்சி கையொப்பம் மேற்சொன்ன முரளி என்பவருடையது. கடந்த 03.06.2024 அன்று, அன்னை தெரசா கார் ஸ்டாண்டில் சங்கருக்கும், ஸ்ரீதருக்கும் ஏற்பட்ட இவ்வழக்கு சண்டை சம்மந்தமாக சம்பவத்திற்கு மறுநாள் போலிசார் மேற்படி கார் ஸ்டாண்டிற்கு வந்து விசாரித்தார்கள். அப்போது சண்டை நடந்த இடத்தை அன்றைய தினம், காலை சுமார் 7.00 மணியளவில் என்று சாட்சி சொல்லிவிட்டு, சாட்சி மீண்டும் காலை சுமார் 8, 9 மணியளவில் படம் வரைந்து, எழுதி என்னிடம் மேற்சொன்ன கையொப்பத்தை சாட்சியாக வாங்கினார்கள். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மேல்குமாரமங்களம் பண்ருட்டியிருந்து சுமார் 10 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். சாதாரணமாக நான் எங்கள் வண்டி ஸ்டாண்டிற்கு பணிக்காக காலை 10.00 மணியளவில் வருவேன் என்றால் சரிதான். ஆனால், முகூர்த்த நாட்களில் பணிக்கு காலை 6.00 மணியளவில் வருவேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளுக்கு மறுநாள் முகூர்த்த நாள் கிடையாது என்றால் சரியல்ல, அன்று முகூர்த்த நாள்தான். நான் அரசியலில் இருப்பதால், கட்சி சம்மந்தமாக அடிக்கடி காவல் நிலையம் சென்றுவருவது வழக்கம் என்றால் சரிதான். அதனடிப்படையில், பண்ருட்டி காவல் நிலைய காவலர்கள் எனக்கு நல்ல

பழக்கம் என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ-3 ல் உள்ள கையொப்பத்தினை நான் காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன் என்றாலும், போலிசார் சம்பவ இடத்தில் வைத்து என்னிடம் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல, கார் ஸ்டாண்டில் வைத்துதான் வாங்கினார்கள். மேற்படி அ.த.சா.ஆ-3 ல் சம்பவ இடம் எந்த இடம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால், கார் ஸ்டாண்டில் 2 வது கார் நிற்கும் இடத்திற்கு அருகில் என்று குறிப்படிப்பட்டிருந்தது. மேற்படி இடம் குறித்த வரைபடத்தில் தான் நான் கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரிதான். அ.சா-1 சங்கர் எனது கார் ஸ்டாண்டில் ஓட்டுனராகவும், தலைவராகவும் இருப்பவர் என்பதனாலும், அவர் எனக்கு நண்பர் என்பதனாலும், ஆஜர் எதிரி வேறு கார் ஸ்டாண்டை சேர்ந்தவர் என்பதனாலும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பமிட்டுவிட்டு, சம்பவ இடத்தில் வைத்து கையொப்பமிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No. 343/2025

Deposition of Witness : LW5/ PW4

| Name | முரளி | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | தேவராஜ் | Village | |
| Age | 40 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **17.11.2025.** | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

நான் தற்போது பண்ருட்டி, செட்டிப்பட்டறைகாலனியில் வசித்து, பண்ருட்டி, கார் ஸ்டாண்டில் கார் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். பண்ருட்டி கார் ஸ்டாண்ட் என்றாலும், அன்னை தெரசா கார் ஸ்டாண்ட் என்றாலும் ஒரே கார் ஸ்டாண்ட் தான். அ.சா-3 பிரகாஷ் என்பவரை தெரியும். அவர் என்னுடன் மேற்சொன்ன கார் ஸ்டாண்டில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறார். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் என் கையொப்பம் இரண்டாவதாக உள்ளது. முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் மேற்சொன்ன பிரகாஷ் என்பவருடையது. சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒருநாள் (தேதி, மாதம் தற்போது நியாபகமில்லை) மாலை வேளையில் நான், எனது சொந்த வேலையாக பண்ருட்டி காவல் நிலையம் சென்றபோது அங்கிருந்த போலிசார் என்னிடம் மேற்படி கார் ஸ்டாண்டில் அங்கு ஓட்டுனராக உள்ள சங்கர் என்பவருக்கும், ஸ்ரீதர் என்பவருக்கும் இடையே நடந்த சண்டை சம்மந்தமான வரைபடத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். மேலும், என்னிடம் எழுதாத ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கினார்கள். நான் போலிசாரிடம் எழுதாத வெள்ளைத்தாளில், போட்டுக்கொடுத்த கையொப்பம் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் ஆகும். போலிசார் என்னிடம் மேற்சொன்ன சண்டை சம்மந்தப்பட்ட, கார் ஸ்டாண்ட் சம்மந்தமாக வரைந்த வரைபடத்தில் ஒரு கையொப்பமும், எழுதாத வெள்ளைத்தாளில் ஒரு கையொப்பமும் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

1. ஆஜர் எதிரி எனக்கு சுமார் 2, 3 வருடங்களாக பழக்கமானவர் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் போலிசார் விசாரணையின்போது கடந்த 04.06.2024 அன்று காலை 8.30 மணியளவில் நானும், எனது நண்பரான பிரகாஷ் என்பவரும் பண்ருட்டி, கடலூர் சாலையில், பாலாஜி மண்டபம் எதிரில் இருக்கும் அன்னை தெரசா கார் ஸ்டாண்ட் அருகே நின்றுகொண்டிருந்தபோது, பண்ருட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் போலிசாருடன் வந்து, இவ்வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் வரைந்து தயார் செய்யபோவதாகவும், அதற்கு சாட்சியாக எங்கள் இருவரையும் கேட்டுக்கொண்டதன்பேரில், நாங்கள் இருவரும் சம்மதித்து உடன் இருந்தோம் என்றும், பிறகு, எங்கள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு, தயார் செய்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு ஆஜர் எதிரி பழக்கமானவர் என்பதால், அவரை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.**